# சட்டமா அதிபரின் ஆலோசனையை பெறும்வரை குருந்தூர்மலை வழக்கு கிடப்பில் போடப்பட்டது!

## சட்டத்தரணி தனஞ்சயன் ஊடகங்களுக்குத் தகவல்




குருந்தூர் மலையில் பௌத்த வழிபாடுகளுக்கு இடையூறு விளைவிக்கப்பட்டதாக கூறப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது முல்லைத்தீவு நீதிமன்றத்திலே இன்றையதினம் எடுத்து கொள்ளப்பட்டது.

இவ்வழக்கின் பின்னர் ஊடகங்களுக்குத் தகவல் வழங்கிய சட்டத்தரணி தனஞ்சயன், சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறும் வரை குருந்தூர்மலை விவகார வழக்கு கிடப்பில் போடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

குருந்தூர்மலை பிரதேசத்திலே அமைதி வழியில் போராட்டத்தை நடாத்திய அரசியல்வாதிகள், சமூக ஆர்வலர்கள் ஆகியோரை உள்ளடக்கியோருக்கு எதிராக முல்லைத்தீவு பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது இன்றையதினம் நீதிமன்றத்தில் எடுத்து கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கின்போது, முல்லைத்தீவு பொலிஸார் தாங்கள் இது தொடர்பாக சட்டமா அதிபரிடம் மேலதிக ஆலோசனை பெற வேண்டும் எனத் தெரிவித்திருந்தனர்.

வழக்கில் இணைக்கப்பட்டிருந்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் உட்பட்ட ஐந்து நபர்களுக்காக முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தினைச் சார்ந்த அனைத்து சட்டத்தரணிகளும் ஆஜராகியிருந்தோம்.

சட்டமா அதிபரின் ஆலோசனை பெறும் வரையில் இவ்வழக்கினை கிடப்பில் போடவேண்டும் எனவும் மேலதிகமாக இந்த வழக்கினை தொடர வேண்டும் என சந்தர்ப்பம் ஏற்பட்டால் மாத்திரம் குறித்த சந்தேக நபர்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டு மீண்டும் இந்த வழக்கானது நீதிமன்றிலே கொண்டு செல்லப்பட முடியும் எனவும் தெரிவித்திருந்தோம்.


அதனை ஏற்றுக்கொண்ட நீதவான், குறித்த வழக்கினை இன்றைய தினத்திலிருந்து கிடப்பில் போட்டுள்ளார். மீளவும் அறிவித்தல் கிடைத்தால் மாத்திரம் குறித்த சந்தேக நபர்கள் வழக்கிற்கு வருகை தர வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார், என்றும் சட்டத்தரணி தனஞ்சயன் குறிப்பிட்டார்.

குறித்த வழக்கு இன்று எடுத்துக்கொள்ளப்பட்ட போது நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் சமூக செயற்பாட்டாளர் 2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 26 வியாழக்கிழமை 11.01.2024 கதிர் 156

14 ஆவது
யாழ் சர்வதேச
வர்த்தக கண்காட்சி
முற்றவெளி
மைதானத்தில்
JITF 2024
14th JAFFNA INTERNATIONAL TRADE FAIR
JANUARY
19 | 20 | 21

## பிரித்தானிய இளவரசி யாழ்ப்பாணம் விஜயம்



இலங்கைக்கு மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பிரித்தானிய இளவரசி இன்று யாழ்ப்பாணத்திற்கு விசேட ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இலங்கை மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய இரு நாடுகளுக்கிடையிலான இராஜ்ஜிய உறவுகளின் 75 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் அதனை சிறப்பிக்கும் விதமாக பிரித்தானிய அரச குடும்பத்தைச் சேர்ந்த மரியாதைக்குரிய இளவரசி மற்றும் அவரது துணைவர் அட்மிரல் சேர் திமோதி லோரன்ஸ் ஆகியோர் மூன்று நாட்கள் 2 ➤

# தமிழரசுக் கட்சியின் தலைமைப் போட்டி மூவருக்குள்ளும் இணக்கப்பாடு இல்லை

## 21ஆம் திகதி வாக்கெடுப்பு

இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் புதிய தலைவரை போட்டியின்றி தெரிவு செய்ய வேண்டுமென்ற அரசியல்குழுவின் விருப்பம் நிறைவேறவில்லை. 3 வேட்பாளர்களும் விட்டுக்கொடுப்புக்கு தயாராக இருக்காததால், எதிர்வரும் 21ஆம் திகதி புதிய தலைவருக்கான வாக்கெடுப்பு நடக்கும்.

கொழும்பில் இன்று எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், சீ.யோகேஸ்வரன் ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடினர். இதில் இணக்கப்பாடு எதுவும் எட்டப்படவில்லை.

நேற்று நடந்த அரசியல் குழுக் கூட்டத்தில், புதிய தலைவர் வாக்கெடுப்பின்றி தெரிவு செய்யப்பட வேண்டும் என்று பெரும்பாலான உறுப்பினர்கள் விரும்பினர்.

இதையடுத்து, தலைமை பதவிக்குப் போட்டியிடும் மூவரும் கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வர ஒரு நாள் கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)




## வவுனியா வைத்தியசாலையில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம்

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை சிற்றூளியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இன்று காலை 10.00 மணியளவில் வைத்தியசாலை நுழைவாயில் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

சம்பள அதிகரிப்பு , ஊழியர் பற்றாக்குறையினை உடன் நிவர்த்தி செய் , வாழ்வாதாரத்தினை அதிகரி போன்ற கோரிக்கைகளை முன்வைத்து 30 நிமிடங்கள் அமைதியான முறையில் 2 ➤

## பிரிட்டன் இளவரசி அன்னே ஜனாதிபதியுடன் சந்திப்பு



இலங்கைக்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு வருகை தந்திருக்கும் பிரித்தானிய இளவரசி அன்னே மற்றும் அவரது கணவர் வைஸ் அட்மிரல் சேர் திமோதி லோரன்ஸ் ஆகியோர் நேற்று கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

கொழும்பு கோட்டை 2 ➤

## பொலிஸ் காவலரண் மீது பெற்றோல் குண்டு வீச்சு!

### இருவர் கைதாகினர்

யாழ்ப்பாணம் - ஊர்காவற்துறை பொலிஸ் காவலரண் மீது பெற்றோல் குண்டு வீசிய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மண்டைதீவு சந்தியில் அமைந்துள்ள பொலிஸ் காவலரண் மீதே நேற்று இரவு பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்ற இருவரைப் பொலிஸார் துரத்திச் சென்று பிடித்துக் கைது செய்தனர்.

மண்டைதீவு மற்றும் ஊர்காவற்துறையைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டனர் எனவும், இருவரும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தையும், தீவகத்தையும் 2 ➤

## அயலகத் தமிழர் தின தொடக்க விழாவில் மனோவும் பங்கேற்பு




சென்னையில் தமிழக அரசால் நடத்தப்படும் அயலகத் தமிழர் தின விழா இன்று ஆரம்பமானது.

2 ➤

# மின்சார சபை லாபத்தை ஈட்டியிருந்தாலும் இம்மாதம் மின்சார கட்டணம் குறையாது?

மின்சார சபை தற்போது ஏறக்குறைய எட்டாயிரம் கோடி ரூபாய் இலாபம் ஈட்டியிருந்தாலும், இந்த மாதத்தில் மின்சார கட்டணம் குறைக்கப்பட மாட்டாது என இலங்கை மின்சார சபை பொறியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தபோது, மின் கட்டண திருத்தம் தொடர்பான முன்மொழிவு இதுவரை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் வழங்கப்படவில்லை. அத்துடன் மின் கட்டணத் திருத்தம் தொடர்பான முன்மொழிவு கிடைத்த பின்னர் அதை ஆய்வு செய்வதற்கு மூன்று வாரங்களுக்கு மேல் தேவைப்படும். அதன்பிறகு, பொதுமக்களின் கருத்துகளை அறிவதற்கு என இன்னும் சில காலங்கள் எடுக்கும்.

எனவே, இவற்றை அவதானிக்கும் போது மின்சார சபைக்கு லாபம் கிடைத்தாலும் ஜனவரி மாதத்தில் மின் கட்டணம் குறையாது என்பது உறுதி, என கூறினார்.

இதேவேளை, கட்டணத்திருத்தம் தொடர்பான பிரேரணையை அடுத்த வாரத்திற்குள் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்க வுள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெத-29)



# மூட நம்பிக்கைகள் காரணமாக 22 மில்லியன் மக்கள் ஆபத்தில்!

மூடநம்பிக்கைகள்காரணமாக 7500 குழந்தைகளுக்கு தட்டம்மை தடுப்பூசி போடாமையினால் இன்று 22 மில்லியன் மக்கள் கடுமையான ஆபத்தில் உள்ளனர் என மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் செயலாளர் ஹரித்த அலுத்கே இது குறித்து தெரிவிக்கையில், தட்டம்மை தடுப்பூசி போடக்கூடாது என்ற மூட நம்பிக்கை, அறிவியல் பூர்வமற்ற கருத்து சமூகத்தில் நிலவி வருவதால், தொற்றுநோய் மதிப்பீடுகளின்படி, அம்மை நோய் மீண்டும் தலைதூக்கும் நிலை நாட்டில் ஏற்பட்டுள்ளது. இதன்படி, தட்டம்மை தடுப்பூசி பெறாத 7500 குழந்தைகள் சமூகத்தில் இருப்பது ஆபத்தான நிலையை ஏற்படுத்தியுள்ளது, என்றார்.

பிள்ளைகளுக்கு தடுப்பூசி போடும் வயதை அடைந்திருந்தால் 9 மாவட்டங்களில் அமைந்துள்ள தடுப்பூசி ஏற்றும் நிலையங்களுக்கு பிள்ளைகளை அழைத்துச் சென்று தட்டம்மை தடுப்பூசி போட ஏற்பாடு செய்யுமாறு பெற்றோரிடம் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ரெத-28)

# கடந்த இரண்டு நாட்களில் 10 பேரைக் காணவில்லை

## பொலிஸ் தலைமையகம் தெரிவிப்பு

நாட்டில் கடந்த இரு நாட்களில் இரண்டுவயது சிறுமி மற்றும் பாடசாலை மாணவி உட்பட 10 பேர் காணாமல்போயுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அதன்படி காணாமல்போன இரண்டு வயது சிறுமி வெலிபென்ன பத்தினியாகொட பகுதியைச் சேர்ந்தவராவார். மேற்படி சிறுமியும், முப்பது வயதுடைய அவரது தாயாரும் கடந்த 9ஆம் திகதி முதல் காணாமல்போயுள்ளனர் என்று பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. அந்தப் பெண் யூடியூப் சனல் ஒன்றை நடத்தி வந்தவர் என்று கூறப்படுகின்றது.

இதேவேளை, கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த 14 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவரை நேற்று முதல் காணவில்லை என உறவினர்கள் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அத்தோடு வரக்காபொல பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய நபர், மொரட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த 57 வயதுடைய பெண், முல்லேரியா பிரதேசத்தைச் சேர்ந்த 67 வயதுடைய ஒருவர், தெகிவளையைச் சேர்ந்த 31 வயதுடைய பெண், தம்பகல்ல பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் மற்றும் காரைதீவு பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய ஒருவரும் காணாமல்போயுள்ளனர்.

மேலும், மெதகம பிரதேசத்தில் வசிக்கும் 40 வயதுடைய ஒருவரும் காணாமல்போயுள்ளதுடன், அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# வடக்கு பொங்கல் விழா 16 இல் கிளிநொச்சியில்

*வடக்கு மாகாண பொங்கல் விழா எதிர்வரும் 16ஆம் திகதி கிளிநொச்சி பல்லவராயன்கட்டில் நடைபெறவுள்ளது.*

*வடக்கு மாகாண கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில்நடைபெறவுள்ள இந்தப் பொங்கல் விழாவில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ். சார்ள்ஸ் கலந்துகொள்ளவுள்ளார்.*

*இந்தப்பொங்கல்நிகழ்வில் சம்பிரதாயபூர்வமாகப் புதிர் எடுத்து பொங்கல் இடம்பெறவுள்ளது. அதனைத்தொடர்ந்து பாரம்பரிய கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (அ)*

### வவுனியா வைத்தியசாலையில்.........

இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

வைத்தியசாலை சிற்றூளியர்கள் சுகயின விடுமுறை வழங்கி கடமையிலிருந்து விலகி குறித்த போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர். (அ)

### பிரிட்டன் இளவரசி ......

ஜனாதிபதி மாளிகைக்கு வருகை தந்த இளவரசி அன்னே உள்ளிட்ட பிரித்தானிய தூதுக்குழுவுக்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியால் வரவேற்பளிக்கப்பட்டது.

அதனையடுத்து இளவரசி ஆன் உள்ளிட்ட தூதுக் குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்கவுடன் சிநேகபூர்வமாகக் கலந்துரையாடினர்.

இந்த நிகழ்வை நினைவுகூரும் விதமாக ஜனாதிபதி மாளிகையிலிருக்கும் விருந்தினர் பதிவேட்டில் இளவரசி ஆன் நினைவுக் குறிப்பொன்றை பதிந்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்டவர்களும் இதன்போது கலந்துகொண்டனர். (அ)

### பொலிஸ் காவலரண் ....

இணைக்கும் மண்டைதீவு சந்தியில் பொலிஸ் காவலரண் காணப்படுவதால் தீவகப் பகுதிகளில் இருந்து சட்டவிரோத இறைச்சிகள், போதைப்பொருட்கள் என்பவற்றை யாழ்ப்பாணத்துக்குக் கடத்தப்படுவது பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

### அயலகத் தமிழர் தின .......

இன்றைய தொடக்க விழாவில் தமிழக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. மற்றும் துறைசார் அமைச்சர் செஞ்சி மஸ்தான் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அ)

### பிரித்தானிய இளவரசி.......

விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளனர்.

அதன்படி இன்று மதியம் யாழ்ப்பாணத்திற்கான பணயத்தை மேற்கொண்ட அவர்கள், யாழ்ப்பாண நூலகத்தில் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளைச் சந்தித்திருந்தனர். (04)

### சட்டமா அதிபரின் .......

ஜுட்சன் ஆகியோர் மன்றுக்குச் சமூகமளித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (04)





செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# கல்முனை மக்களின் வெள்ளநிலை நிவாரணம் வழங்கல் தொடர்பாக

## ஹரீஸ் எம்.பி நேரில் ஆராய்ந்தார்



(நூருல் ஹுதா உமர், சர்ஜுன் லாபீர்)

கல்முனை பிரதேச செயலகப் பிரிவில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் தற்போதைய நிலை தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சரும், நாடாபாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் கல்முனை பிரதேச செயலாளர் ஜெ. லியாக்கத் அலியை இன்று சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது பாதிப்பு நிலைகளை கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கும் ஏற்பாடுகள் தொடர்பிலும் ஆராய்ந்து நிவாரண பணிகளை முன்னெடுக்கவும் முடிவெடுக்கப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் கல்முனை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு சமைத்த உணவு



(கே.எ.ஹமீட்)

ஏறாவூர் பிரதேசத்தில் தொடர்ச்சியாக பெய்து வருகின்ற அடை மழை காரணமாக தாழ் நிலப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்து மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டிருந்தது. இவ்வாறான இடங்களை மையப்படுத்தி ஏறாவூர் சமூகநலன் அபிவிருத்தி ஒன்றியம் சமைத்த உணவினை 400 குடும்பங்களைச் சேர்ந்த 1225 பேருக்கு நேற்று வழங்கி வைத்தது.

# யாழ்ப்பாணம் – ஊர்காவற்துறை சட்டத்தரணிகள் சங்கம் 37 வருடங்களின் பின்னர் மீளுவாக்கம்




இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் வடமாகாணத்திற்கான உப தலைவர் பா. தவபாலன் தலைமையில் நேற்றைய தினம் புதன்கிழமை நிர்வாக தெரிவு இடம்பெற்றது.

அதன் போது முன்னாள் நீதிபதி சரோஜினி இளங்கோவன் தலைவராக ஏக மனதாக தெரிவானார். அதனை தொடர்ந்து ஏனைய நிர்வாக தெரிவுகள் இடம்பெற்றன.

உள்நாட்டு யுத்தம் காரணமாக ஊர்காவற்துறை சட்டத்தரணிகள் சங்கம் 1987ஆம் ஆண்டிற்கு பின்னர் செயலிழந்து காணப்பட்ட நிலையில் 37 வருடங்களின் பின்னர் நேற்றைய தினம் சட்டத்தரணிகள் சங்கம் மீண்டும் மீள் உருவாக்கப்பட்டுள்ளது.

(01)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு புலம்பெயர் உறவுகள் உணவுப் பொதி



(காரைதீவு நிருபர் சகா)

அக்கரைப்பற்றை சேர்ந்த வெளி நாடுகளில் வசிக்கும் புலம்பெயர் உறவுகளின் நிதி உதவியில் இன்று (11) வியாழக்கிழமை அக்கரைப்பற்று பிரதேசத்தில் 700 பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகல்போசனம் பொதியாக வழங்கப்பட்டது.

ஆலையடிவேம்பு நாவற்காடு கோளாவில் பனங்காடு போன்ற பிரதேசங்களில் வெள்ளத்துள் தத்தளிக்கின்ற மக்களுக்கு நேரடியாக இந்த பகல் போசனம் வழங்கப்பட்டது .

காரைதீவைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளர் லோகநாதன் கஜரூபன் தலைமையிலான இளைஞர் குழுவினர் இந்த பகல் போசனத்தை வழங்கினார்கள்.



# செங்கடலில் சரக்குக் கப்பல்களைக் குறிவைத்து ஹூதி கிளர்ச்சியாளர்கள் தீவிரமான தாக்குதல்!



செங்கடல் பகுதியில் சரக்குக் கப்பல்களைக் குறிவைத்து யேமனின் ஹூதி கிளர்ச்சியாளர்கள் இதுவரை இல்லாத அதிகபட்ச எண்ணிக்கையில் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை செலுத்தி நேற்று புதன்கிழமை தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அவற்றை அமெரிக்கா மற்றும் பிரிட்டன் படையினர் இடைமறித்து அழித்துள்ளதாக தனியார் உளவு நிறுவனமான ஆம்ப்ரே தெரிவித்துள்ளது.

அது வெளியிட்டுள்ள தகவலின்படி, செங்கடல் வழியாகச் செல்லும் சரக்குக் கப்பல்களைக் குறிவைத்து புதன்கிழமை ஏராளமான ஏவுகணைகளும், ட்ரோன்களும் ஏவப்பட்டன. ஈரான் ஆதரவு பெற்ற ஹூதி கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் யேமனின் ஹொடைடா, மோக்கா ஆகிய துறைமுகங்களிலிருந்து அவை ஏவப்பட்டன.

செங்கடலில் சரக்குக் கப்பல்கள் மீது ஒரே நாளில் இவ்வளவு அதிக எண்ணிக்கையில் ஏவுகணைகளையும் ட்ரோன்களையும் கிளர்ச்சியாளர்கள் வீசியது இதுவே முதல்முறையாகும், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யேமன் கிளர்ச்சியாளர்களிடமிருந்து செங்கடல் வர்த்தக வழித்தடத்தைப் பாதுகாப்பதற்காக அந்தப் பகுதியில் நிறுத்தப்பட்டுள்ள அமெரிக்கா மற்றும் பிரிட்டனின் போர்க் கப்பல்கள், கிளர்ச்சியாளர்கள் வீசிய ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை இடைமறித்து அழித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதலில் யாரும் காயமடைந்ததாக உடனடி தகவல் இல்லை.

இஸ்ரேலுக்குள் தரை, கடல், வான் வழியாக கடந்த ஒக்டோபர் ஆம் திகதி நுழைந்த ஹமாஸ் படையினர், அங்கு சுமார் 1,200 பேரை படுகொலை செய்ததாகத் தகவல்கள் வெளிவந்தன. அதையடுத்து, ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் ஒழித்துக்கட்டுவதாக சூளுரைத்துள்ள இஸ்ரேல், காஸா பகுதியில் வான்வழியாகவும், தரைவழியாகவும் தீவிர தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்தப் போரில், ஈரான் ஆதரவுடன் செயல்பட்டு வரும் லெபனானின் ஹிஸ்புல்லா படையினர் மற்றும் யேமனின் ஹூதி கிளர்ச்சியாளர்கள் ஹமாஸ் அமைப்புக்கு ஆதரவு அளித்து வருகின்றனர்.

இந்தச் சூழலில், தங்கள் நாட்டையொட்டிய செங்கடல் பகுதி வழியாகச் செல்லும் சரக்குக் கப்பல்கள் மீது ஹூதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணைகளை வீசியும், ட்ரோன்களை ஏவியும் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

காஸா போரில் ஹமாஸ் அமைப்பினருக்கு அதரவு அளிக்கும் வகையில் இஸ்ரேலுடன் தொடர்புடைய சரக்குக் கப்பல்களை மட்டும் தாக்கி அழிப்பதாக அவர்கள் கூறுகின்றனர். ஆனால், நாள் செல்லச் செல்ல இஸ்ரேலுடன் கொஞ்சமும் தொடர்பில்லாத கப்பல்கள் மீதும அவர்கள் தாக்குதல் நடத்துவது அதிகமாகி வருகிறது.

இதனால், உலகின் மிக முக்கியமான கடல்வணிக வழித்தடமான அந்தப் பகுதியில் சரக்குப் போக்குவரத்து மிகப் பெரிய பின்னடைவைச் சந்தித்து பல்வேறு நாடுகளுக்கும் பொருளாதார இழப்பை ஏற்படுத்தி வருகிறது.

அதையடுத்து, செங்கடலில் ஹூதி கிளர்ச்சியாளர்களிடமிருந்து சரக்குக் கப்பல்களைப் பாதுகாப்பதற்காக இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், இலங்கை, சிங்கப்பூர் போன்ற பல்வேறு நாடுகளும் தங்களது போர்க் கப்பல்களை அங்கு ரோந்துப் பணியில் ஈடுபடுத்தியுள்ளன.

சரக்குக் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துவது தொடர்ந்தால் ஹூதி கிளர்ச்சியாளர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அமெரிக்காவும் பிரிட்டனும் எச்சரித்தன.

அதனைப் பொருள்படுத்தாமல் செங்கடலில் இதுவரை இல்லாத அதிகபட்ச எண்ணிக்கையில் ஏவுகணை மற்றும் ட்ரோன்களை வீசி ஹூதி கிளர்ச்சியாளர்கள் தற்போது தாக்குதல் நடத்தியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (04)

# டில்லி முதல்வரின் கோவா பயணம் ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிப்பு



இந்தியாவில் நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலை முன்னிட்டு ஆம் ஆத்மி கட்சியின் தயார் நிலையை மதிப்பிடுவதற்காக டில்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் இரண்டு நாள் பயணமாக இன்று செல்லவிருந்த கோவா சுற்றுப்பயணம் குடியரசு நாள் விழா ஏற்பாடுகள் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கட்சி வட்டார தகவல்கள் தெரிவித்துள்ளன.

மக்களவைத் தேர்தலுக்கு ஆம் ஆத்மி கட்சியின் முன்னேற்பாடுகளை மதிப்பிடுவதற்காக கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளரும், தில்லி முதல்வருமான அரவிந்த் கேஜ்ரிவால் இரண்டு நாள் பயணமாக கோவா செல்லவிருருந்தார்.

இந்தப் பயணம் இன்று ஆரம்பிப்பதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. கோவாவில் கட்சியின் அமைப்பு ரீதியிலான முக்கிய நிர்வாகிகளுடம் கேஜ்ரிவால் சந்திப்புகளை நடத்துவதோடு, கட்சித் தொண்டர்கள் மத்தியிலும் உரையாடுவார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஜனவரி 7, 8 ஆகிய திகதிகளில் குஜராத்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட கேஜ்ரிவால், பொதுக் கூட்டங்களை நடத்தியதோடு, சிறையில் இருக்கும் கட்சித் தலைவர் சைதர் வாசவாவையும் சந்தித்தார்.

எதிர்க்கட்சிகளின் 'இந்தியா' கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஆம் ஆத்மி கட்சி, வரும் மக்களவைத் தேர்தலில் டில்லி, பஞ்சாப், ஹரியாணா, குஜராத், கோவா ஆகிய 5 மாநிலங்களில் காங்கிரஸ் உடன் இணைந்து பிரதானமாகப் போட்டியிடும் என்று அறிவித்துள்ளது. இந்தநிலையில், முதல்வர் கேஜ்ரிவால் கோவாவிற்கு அரசியல்ரீதியிலான பயணம் மேற்கொள்ள இருப்பதாகவும் தகவல்கள் வெளியானது.

ஆயினும், இன்று அவர் செல்லவிருந்த கோவா சுற்றுப்பயணம் குடியரசு நாள் விழா ஏற்பாடுகள் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும், அடுத்த வாரம் அவர் கோவா செல்வார் என்றும் கட்சி வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. (04)



# மறைந்த முன்னாள் ராணுவ ஆட்சியாளர் முஷாரபுக்கு மரண தண்டனையை உறுதி செய்தது உச்சநீதிமன்றம்

பாகிஸ்தானின் மறைந்த முன்னாள் ராணுவ ஆட்சியாளர் முஷாரபுக்கு தேசத்துரோக வழக்கில் விதிக்கப்பட்ட மரண தண்டனையை அந்த நாட்டு உச்சநீதிமன்றம் நேற்று உறுதி செய்தது.

பாகிஸ்தானில் கடந்த 2007 ஆம் ஆண்டு நெருக்கடி நிலையை முஷாரப் அறிவித்தார். அதற்காக அரசமைப்புச் சட்ட அமலாக்கத்தை அவர் நிறுத்திவைத்தார்.

இது தொடர்பாக நடைபெற்று வந்த தேசத் துரோக வழக்கில் முஷாரபுக்கு சிறப்பு நீதிமன்றம் கடந்த 2019 ஆம் ஆண்டு மரண தண்டனை விதித்தது.

இருந்தாலும், சிறப்பு நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது என்று லாகூர் உயர்நீதிமன்றம் 2022 இல் தீர்ப்பளித்தது.

இது தொடர்பான மனுவை விசாரித்து வந்த 5 நீதிபதிகள் அடங்கிய உச்சநீதிமன்ற அமர்வு, 2020 இல் லாகூர் உயர்நீதிமன்றம் அளித்த உத்தரவு செல்லாது, என்று அறிவித்தது. அதையடுத்து, முஷாரபுக்கு எதிரான மரண தண்டனையை உச்சநீதிமன்றம் தற்போது உறுதிசெய்துள்ளது.

துபாயில் நாடு கடந்து வசித்து வந்த முஷாரப், நீண்டகால உடல்நலக் குறைவு காரணமாக தனது 79 வயதில் 2023 பிப்ரவரி 5 இல் மரணமடைந்தமை நினைவுகூரத்தக்கது. (04)



# தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் பெண் தலைமைக் குடும்பங்களுக்கு உதவி



(ஹஸ்பர் ஏ.எச்)

தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் குறித்த பயனாளிகளுக்கு வாழ்வாதார உபகரணங்கள் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

மகளிர் , சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ்பெண் தலைமை தாங்கும் 10 குடும்பங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதில் சிறு கடை,கோழி வளர்ப்புக்கான உபகரணங்கள் என தெரிவுசெய்யப்பட்ட மகளிர் சங்க உறுப்பினர்களுக்கு கோழிக்கூடு, கோழித்தீன், மருந்துகள் மற்றும் நாட்டுக்கோழிகளும் வழங்கப்பட்டன.

பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் அதன் மூலம் நாளாந்தம் தங்களது ஜீவனாம்சத்தை கொண்டு செல்லவும் இத் திட்டம் நடை முறைப்படுத்தப்படுகிறது.

இதில் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், கணக்காளர் எஸ்.செல்வதாஸ், நிருவாக உத்தியோகத்தர் உடகெதர, மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.பாமிணி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



# நிந்தவூர் பிரதேச மாணவர்களுக்கான கல்விக்கான உதவிகள் வழங்கப்பட்டன


(அஸ்ஹர் ஆதம்)

சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையில் நிந்தவூர் பிரதேச மாணவர்களுக்கான கல்விக்கான உதவியும் இரட்டைப் பிள்ளைகளுக்கு காசோலைகளும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு நிந்தவூர் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம்.அப்துல் லத்தீப் தலைமையில் இடம்பெற்றது.

சிறுவர் உரிமைகள் மேன்பாட்டு உத்தியோகத்தர் எஸ்.எல்.எஸ்.ஹசீனாவின் ஒருங்கிணைப்பின் கீழ் இடம் பெற்ற இந்நிகழ்வில் பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவை சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# பதவிக் காலத்தை நிறைவுசெய்யும் பாக்கிஸ்தான் உயர் ஸ்தானிகருக்கு கொழும்பில் பிரியாவிடை



(கே.எ.ஹமீட்)

இலங்கையில் தமது பதவிக்காலத்தை நிறைவு செய்து கொண்டு விடைபெற்றுச் செல்லும் பாக்கிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உமர் பாரூக் புர்கிக்கு, இலங்கை சுற்றுலா மற்றும் கைத்தொழில் மன்றத்தின் தலைவர் ஏ.எம்.ஜவ்பரின் ஏற்பாட்டில், முஸ்லிம் ஹாண்ட் அமைப்பின் இலங்கை வதிவிட பிரதிநிதி ஏ.எம் மிஹ்லாரின் ஒத்துழைப்புடன் பிரியாவிடை நிகழ்வு இடம்பெற்றது.

கொழும்பு சினமண்ட் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்ற இராப்போசனத்துடனான பிரியாவிடை நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் முக்கிய உரையொன்றை நிகழ்த்தியதோடு, உயர் ஸ்தானிகருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக்கும் கலந்து கொண்டார்.

# கல்முனையில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் இந்த வாரம் ஆரம்பம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

விசேட டெங்கு ஒழிப்பு வாரமொன்றை நடைமுறைப்படுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளதற்கு அமைய தெரிவு செய்யப்பட்ட 70 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளை உள்ளடக்கி இந்த டெங்கு ஒழிப்பு வாரம் அமுல்படுத்தப்படவுள்ளது.


இது தொடர்பான வேலைத்திட்டம் கல்முனையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சக்கீலா இஸ்ஸதீன் அவர்களின் பணிப்புரைக்கு அமைவாக தொற்று நோய் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.சி.எம் பஸாலின் நேரடி கண்காணிப்புடன் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர்.எம் அஸ்மி தலைமையில் மாபெரும் டெங்கு ஒழிப்பு சிரமதானம் கல்முனை பிரதேசத்தில் நடைபெற்று வருகின்றது.

நிலைபேறான ஆரோக்கியமான வாழ்வை உறுதி செய்வதற்காகவும் இலங்கை அரசாங்கமும், சுகாதாரத் திணைக்களமும் பலவிதமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. அதன்ஒரு செயற்பாடாக இந்த டெங்கு ஒழிப்பு வாரம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

நாட்டில் டெங்கு நோயின் தாக்கம் அதிகமாகவுள்ள தெரிவு செய்யப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலுள்ள தெரிவு செய்யப்பட்ட கிராம சேவை அலுவலர் பிரிவுகளில் நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் விசேட நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. இந்த நடவடிக்கை ஒரு கூட்டு நடவடிக்கையாகவே செயற்படுத்தப்படுகின்றது. இதற்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு கல்முனை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சக்கீலா இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.



# இந்திய, பிரித்தானியப் பாதுகாப்புத் துறை அமைச்சர்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தை



பிரித்தானியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், அந்நாட்டு பாதுகாப்புத் துறை அமைச்சர் கிராண்ட் ஷ ாப்ஸை செவ்வாய்க்கிழமை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது, பாதுகாப்பு ஒத்துழைப்பு, ராணுவ தளவாடங்கள் உற்பத்தியில் ஒத்துழைப்பை அதிகரித்தல் உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் 3 பயணமாக திங்கட்கிழமை இரவு பிரித்தானியாவைச் சென்றடைந்தார். பிரித்தானியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் கிராண்ட் ஷாப்ஸை ராஜ்நாத் செவ்வாய்க்கிழமை சந்தித்தார்.

இந்தச் சந்திப்பு குறித்து அமைச்சர் ராஜ்நாத் சிங் சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட பதிவில், 'இருதரப்பு பாதுகாப்பு நல்லுறவு குறித்து இருவரும் ஆலோசித்தோம். பாதுகாப்பு ஒத்துழைப்பு, ராணுவ தளவாடங்கள் உற்பத்தியில் தொழில் துறை ஒத்துழைப்பு உள்ளிட்டவை குறித்து பேச்சுவார்த்தை நடத்தினோம்' எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, லண்டனில் உள்ள பிரித்தானியப் பாதுகாப்பு அமைச்சக தலைமையகத்தில் அமைச்சர் ராஜ்நாத் சிங்குக்கு ராணுவ அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. தொடந்து, டவிஸ்டாக் சதுக்கத்தில் உள்ள மகாத்மா காந்தி சிலைக்கு ராஜ்நாத் சிங் மரியாதை செலுத்தினார். அப்போது, பிரித்தானியாவுக்கான இந்திய தூதர் விக்ரம் துரைசுவாமி மற்றும் ஏனைய தூதரக அதிகாரிகளும் உடனிருந்தனர்.

கடந்த 2002 இல் அப்போதைய பா.ஜ.க. அரசின் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் பிரித்தானியாவுக்குப் பயணம் மேற்கொண்டார். இதைத்தொடர்ந்து, 22 ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஒருவர் பிரித்தானியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (04)






## வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்து 23 வயதுடைய இளம் தாய் பலி

வீடொன்றின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் 23 வயதுடைய இளம் தாய் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் பொலனறுவை, ஹிங்குராங்கொடை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


சம்பவத்தில் அவரது கணவரும் ஒன்றரை வயது குழந்தையும் படுகாயமடைந்த நிலையில் பொலனறுவை வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து பெய்து வரும் கன மழை காரணமாக குறித்த வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்துள்ளது என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

## ஐந்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான இணையத்தளங்கள் அங்குரார்ப்பணம்!








யாழ்ப்பாணத்திலுள்ள ஐந்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான உத்தியோகபூர்வ இணையதளங்கள் வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸினால் இன்றைய தினம் புதன்கிழமை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

குறித்த நிகழ்வு வட மாகாண ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அதன் போது, வேலணை, வலிகாமம் மேற்கு, நெடுந்தீவு, வடமராட்சி தெற்கு மற்றும் மேற்கு ஆகிய பிரதேச சபைகளுக்கும், பருத்தித்துறை நகர சபைக்குமான உத்தியோகப்பூர்வ இணையத்தளங்கள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.

மக்களுக்காக சேவை புரியக்கூடிய உள்ளூராட்சி நிறுவனங்கள் இவ்வாறு உத்தியோகபூர்வ இணையத்தளங்கள் ஊடாக தங்களின் பணிகளை மேற்கொள்ள எடுத்துள்ள முயற்சிக்கு பாராட்டுகளை தெரிவித்த ஆளுநர், பொதுமக்கள் தங்களுக்கான சேவைகளை இணையத்தினூடாக பெற்றுக்கொள்வதற்கு தேவையான வசதிகளையும், வரி உள்ளிட்ட கட்டணங்களையும் இணையதளத்தினூடாக செலுத்துவதற்கான வசதிகளையும் மேம்படுத்த வேண்டும் என அதிகாரிகளுக்கு தெரிவித்தார்.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
DOWNLOAD PASSENGER APP:
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 0706563213
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!